**'செயல்... அதுவே சிறந்த சொல்' என்பார்கள். ஆழமான சிந்தனைக்குப் பின் வருவதே ஆற்றல்மிகு செயல். பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் சிந்தித்துச் செயல்படுத்தி, தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் அவர் உருவாக்கிச் சென்ற கட்டமைப்புகள் குறித்து வாரந்தோறும் இங்கு...**



# இடம் பொருள் கலைஞர் 17




- மொத்த குடிநீர்த் திட்டங்கள் : 556
- தினசரி பயனாளர்கள் : 4 கோடியே 23 லட்சம்
- தினசரி குடிநீர் விநியோகம் : 2 ஆயிரத்து 146 மில்லியன் லிட்டர்
- தலைமை அலுவலகங்கள் : 4
- வட்ட அலுவலகங்கள் : 17
- கோட்ட அலுவலகங்கள் : 85
- உப கோட்ட அலுவலகங்கள் : 258
- பயிற்சி மையங்கள் : 4
- தரக் கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் : 4

# தாகம் தீர்த்த கலைஞர்!

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

**நா**கரீக சமூகத்தின் பண்பாட்டுச் செழுமைகளில் ஒன்று நீர்மேலாண்மை. தொன்றுதொட்டே தமிழர்கள் அதில் சிறந்து விளங்கியவர்கள். அணை, ஏரி, குளம், என நீரைத் தேக்கி விவசாயத்தைப் பெருக்கிய, பெருமைமிகு வரலாறு நம்முடையது. அந்தப் பெருமையை குடிநீருக்கும் மடைமாற்றிய ஆட்சியாளர்களில், கலைஞரின் தொலைநோக்குதான் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்.

தமிழ்நாட்டு வரலாற்றில், சமூக நலத் திட்டங்களை கழக ஆட்சிக்கு முன்னர், கழக ஆட்சிக்குப் பின்னர் என 'மைல் கல்' வைத்துப் பிரிக்கலாம். அப்படியான காலகட்டம்தான் 1967. உணவுப் பஞ்சம் ஒருபக்கம், சுகாதாரமான குடிநீர்த் தட்டுப்பாடு மறுபக்கம். இவற்றினூடே கல்வி, வேலைவாய்ப்பு, மாநில உரிமை என தமிழ்நாட்டின் அடையாளத்தைக் கட்டமைக்க வேண்டியது கழக ஆட்சியின் மிகப் பெரிய பொறுப்பாக இருந்தது.

உணவுப்பஞ்சத்தைப் போக்க விவசாய உற்பத்தியைப் பெருக்கி, உணவுப்பொருள் விநியோகத்தையும் முறைப்படுத்தியது போல, ஒவ்வொரு ஊருக்கும் குடிநீர் சென்று சேர வேண்டும் என நீண்ட கால நோக்குடன் 1971-ஆம் ஆண்டில் இந்த வாரியத்தைத் தொடங்கி வைத்தார் கலைஞர். தொடங்கி வைத்த நாள், அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளான ஏப்ரல் 14. குடிநீருக்காக உரிமைப் போராட்டம் நடத்திய அண்ணலின் வரலாற்றைத் தொட்டுத்தான், மக்களின் அடிப்படை உரிமை குடிநீர் என அந்த நாளில் தொடங்கி வைத்தார்.

**ஒரு காலத்தில், தமிழ் சினிமாவில் நிறைந்திருந்த குடம் சுமக்கும் காட்சிகள், இன்றைக்கு முற்றிலும் மறைந்து போய் இருப்பதே குடிநீர் வடிகால் வாரியத்தின் வெற்றி எனலாம்.**

### போர்க்கால பணிகள்

தமிழ்நாடு முழுவதும், நகரங்களிலும் கிராமங்களிலும் குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி, சீராக விநியோகம் செய்வது இந்த வாரியத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. அதற்காக நகர குடிநீர்க் கட்டமைப்புகளை மேம்படுத்துவது, கிராமங்களில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகள் அமைத்து, குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வது, கை பம்பு வசதி குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் விவசாயக் கிணறுகளைத் தூர்வார கடன் என இந்தத் திட்டத்தில் போர்க்கால பணிகளாக மேற்கொள்ளப்பட்டன. அதன்பின்னர் தான், குடிநீருக்காக, தலையிலும் இடுப்பிலும் குடங்களைச் சுமந்துகொண்டு, மைல் கணக்கில் நடந்த தமிழ்நாட்டுப் பெண்களின் சுமைகள் படிப்படியாகக் குறைந்தன.

### வேலை அளித்த திட்டங்கள்

ஆங்கிலேயர் ஆட்சி முதல், தமிழ்நாட்டில் குடிநீர் வசதிகளை உருவாக்குவதற்குச் செலவிடப்பட்ட தொகை வெறும் 80 கோடி ரூபாய். ஆனால், 1971-1975 ஆண்டுகளுக்கு இடையில் இந்தத் திட்டங்களுக்காக மட்டும் 53 கோடி ரூபாய் செலவிடப்பட்டது.

குடிநீர்க் கட்டமைப்பை மேம்படுத்திய இந்த நோக்கங்கள், மற்றொரு வகையில் அப்போதைய வறட்சி நிவாரணப் பணியாகவும், கிராம மக்களுக்கான வேலைவாய்ப்பாகவும் அமைந்தது. அந்த வகையில், 'மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் முன்னோடியாகவும் இதைக் குறிப்பிடலாம்.

### கலைஞர் பெயர் சொல்லும்

நீண்ட காலத் திட்டங்கள், தற்காலிகத் திட்டங்கள் என இரண்டு வகைகளில் தீர்வுகளை அளித்து வருகிறது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். சென்னை தவிர்த்து, கோவை, திருச்சி, மதுரை என வளர்ந்து கொண்டிருந்த பெரு நகரங்களின் எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு பல திட்டங்களை உருவாக்க, தனது ஆட்சிக் காலத்தில் அதற்கு வழிகாட்டினார் கலைஞர்.

சிறுவாணியிலிருந்து கோவைக்கு குடிநீர், கடலூருக்கு 'காடாம்புலியூர் குடிநீர்த் திட்டம்', 'மேட்டூர் கூட்டுக் குடிநீர் திட்டம்' என ஒரு மாவட்டம் அல்லது சில மாநகராட்சிகளை இணைத்துக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டங்கள் தீட்டப்பட்டன.

சென்னைக்கு வீராணம் குடிநீர்த் திட்டம், ராமநாதபுரம் கூட்டுக்குடிநீர்த் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர்த் திட்டம் எனப் பல குடிநீர்த் திட்டங்களை உருவாக்கியதும் செயல்படுத்தியதும் கலைஞர்தான். ரூ.200 கோடி செலவில் கண்டலேறு கால்வாயைச் சரி செய்து சென்னைக்கு கிருஷ்ணா நதிநீர் முறையாகக் கிடைக்கச் செய்தவர் கலைஞர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தலைவிரித்தாடிய குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க, 2007-ஆம் ஆண்டில், ரூ.650 கோடி செலவில் காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தினார். இதன்மூலம் புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம் வரை தென் கிழக்கு மாவட்டங்களின் தண்ணீர் வாட்டம் தகர்ந்தது. கடலோர மாவட்டங்களில் உப்புநீர்ச் சிக்கலைக் குறைக்க ஆழ்துளைக் கிணறு ஏற்படுத்தும் திட்டம், கடல்நீரைக் குடிநீராக்கும் வடசென்னை, நெம்மேலி கடல்நீர்ச் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவையும் கலைஞர் பெயர் சொல்பவைதான்.

### கண்ணுக்குத் தெரியாத நாளங்கள்!

ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு, குடிநீர் கொண்டு செல்லும் சவாலான, சிக்கலான திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது இந்த வாரியம். குழாய் மூலம் மட்டுமல்ல, மாநகராட்சி, நகராட்சிகளில் குறுக்கும் நெடுக்குமாக, குறுகலான சந்துகளிலும் லாரிகள் மூலம் குடிநீரைக் கொண்டு சேர்த்து வருகிறது. குடிநீர் வடிகால் வாரியத்தின் அன்றாடச் செயல்பாடுகள் ரத்தநாளங்களைப் போல தமிழ்நாட்டின் அன்றாட செயல்பாடுகளில் கண்ணுக்குத் தெரியாமல் உயிரூட்டி வருகின்றன.

குடிநீர் வழங்கல் மட்டுமின்றி, கழிவுநீர் வடிகால்கள் அமைத்து, அவற்றை மேலாண்மை செய்வதும் இந்த வாரியம்தான். பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், நீரினால் ஏற்படும் தொற்றுநோய்கள் வெகுவாகக் குறையவும் வாரியம் துணை செய்கிறது.

### இந்தியாவுக்கே வழிகாட்டிய திட்டம்

குடிநீர் வழங்குவதை மட்டும் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்த இந்த வாரியம், இன்றைக்குக் குடிநீர்த் தர ஆய்வு, திட்ட வடிவமைப்பு, மதிப்பீடு, மேம்பாடு என மேலாண்மையிலும் கவனம் செலுத்தி வருகிறது.

2024-ஆம் ஆண்டுக்குள் 'அனைவருக்கும் குடிநீர்' என 2019-ஆம் ஆண்டில் 'ஜல் ஜீவன் மிஷன்' என ஒரு திட்டத்தை அறிவித்தது ஒன்றிய அரசு. ஆனால், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே, ஒவ்வொரு ஊருக்கும் நீர்த்தேக்கத் தொட்டி, குழாய் இணைப்பு, ஒவ்வொரு தெருவுக்கும் குடிநீர் விநியோகம் என தமிழ்நாட்டின் தண்ணீர் பஞ்சத்துக்குத் தீர்வு கண்டவர் கலைஞர். இந்திய ஒன்றியத்துக்கு இப்போது வழிகாட்டும் திராவிட மாடலுக்கு, அப்போதே அடித்தளம் அமைத்த கலைஞர், தமிழ்நாட்டுக் குடிநீர்த் தேவையை முறைப்படுத்திய நவீனகால கரிகாலன் என்றால் மிகையில்லை.

**...வலம் வருவோம்**

**இந்தக் கட்டுரையை இளைஞர் அணி இணையதளத்தில் படிக்க அருகில் உள்ள QR Code-ஐ ஸ்கேன் செய்யவும்.**

## காலத்தை வெல்லும் குரல்!

**தி**ராவிட மாடலே இந்தியாவின் ஆட்சி மாடல் என உரத்துச் சொல்லியிருக்கிறார் நமது முதலமைச்சர். தமிழ் உணர்வு, திராவிட உணர்வு ஆகியவற்றில் சிலருக்கு ஒவ்வாமை இருக்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் அவரது கேள்வி பதில் ஒன்று அதற்கு பதில் சொல்கிறது. **திராவிடம், தமிழ் உணர்வு என நீங்கள் பேசிக்கொண்டிருந்த விஷயங்களை, இனிவரும் காலங்களிலும் பேசி, அரசியலில் வெற்றிபெற முடியும் என நினைக்கிறீர்களா...?**

"திராவிடம், தமிழ் உணர்வு போன்ற லட்சியங்கள், எப்போதும் சுடர்விட்டு எரியும் தீபங்கள். அவை எல்லா காலங்களுக்கும் பொருத்தமானவை. தமிழன் என்பது, எப்படி நிரந்தரமானதோ, அதைப் போன்றதுதான் திராவிடமும் தமிழ் உணர்வும். தாய்ப்பாசத்துக்கு எப்படி காலநிர்ணயம் இல்லையோ, அதைப்போல் தமிழ் உணர்வுக்கும் காலநிர்ணயம் கிடையாது".

எத்தனை ஆண்டுகள் கழித்து, யார் வந்து கேள்வி எழுப்பினாலும், அவர்களுக்குச் சொல்ல வேண்டிய பதிலை முத்தமிழறிஞர் கலைஞர் 2016-ஆம் ஆண்டு தனது முகநூல் பதிவில் பதிவு செய்திருக்கிறார்.

## :ப்ளாஷ்பேக்





அழகப்பன்

### இதழுக்காக நாடகம்!

**1956**-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா நடத்திய 'ஹோம்லாண்ட்' ஆங்கில இதழ், இடையில் நின்று போய்விட்டது. அவ்விதழை மீண்டும் தொடங்க நிதி தேவைப்பட்டது. இதற்காக அண்ணாவின் **'சந்திரோதயம்'** நாடகத்தை நடத்திய பெருமை அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களான எங்களுக்குக் கிடைத்தது. சிதம்பரத்தில் நடந்த இந்த நாடகத்தில் அண்ணா, கே.ஆர். இராமசாமி ஆகியோருடன் கல்லூரி மாணவர்களும் நடித்தனர். நானும் சிறு பாத்திரத்தில் நடித்தேன். அதில் வசூலான ரூ.10 ஆயிரம், அண்ணாவிடம் அளிக்கப்பட்டது. நாடகம் முடிந்ததும், அவருடன் மாணவப் பருவத்திலிருந்த நான், 'கெம்பு' புகைப்பட நிலையத்தில் எடுத்துக்கொண்ட படம் இது.

**-ஆறு.அழகப்பன், தமிழ்த்துறை முன்னாள் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத்தினரின் சிறை மரணங்கள்

**1976 -ஆம் ஆண்டு நெருக்கடி நிலையின்போது, தி.மு.க. தலைவர்கள் பலரும் வெவ்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். இரவு நேரத்தில் சிறைக்கதவுகள் திறக்கப்படக்கூடாது என்பது சிறை விதி. அதை மீறி சென்னை மத்தியச் சிறையின் கதவுகள் திறக்கப்பட்டன. காவலர்கள் தடியுடன் சென்று கழகத் தலைவர்களைக் கடுமையாகத் தாக்கினர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தான் காவலர்களின் இலக்கு. அவரைப் பாதுகாப்பதற்காகக் குறுக்கிட்ட, சிட்டிபாபு கடுமையான தாக்குதலுக்குள்ளாகி பின்னர் மரணமடைந்தார். தாக்குதலில் மூத்த தலைவர் ஆற்காடு வீராசாமியின் காது, திறனிழந்தது. மறைந்த தலைவர் முரசொலி மாறனின் முதுகுப்பகுதியில் கடுமையான தாக்குதல். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியும் கடும் காயமடைந்தார். இவர்களைப் போலவே, மதுரை சிறையில் தாக்குதலுக்குள்ளான கழகப் பிரமுகர் சாத்தூர் பாலகிருஷ்ணன் மரணமடைந்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 114




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.